## கலைப்புலம்

### இசைத்துறை

### 1. இசை ஆசிரியர் பயிற்சி (Music Teacher) - பட்டயம்

| | |
|---|---|
| தாள் -1 | இசைக் கல்வியியல் |
| தாள்-2 | கல்வி உளவியலும் பள்ளி ஆட்சிமுறையும் |
| தாள்-3 | செயல்முறையும் இசைப் பயிற்சி உபகரணங்களும் |
| தாள்-4 | செய்முறை |

#### தாள்-1. இசைக் கல்வியியல் (Theory)

| | |
|---|---|
| அலகு 1 | கல்வித் திட்டத்தில் இசையின் முக்கியத்துவம்; இசை கற்பித்தலின் நோக்கம், மதிப்பு |
| அலகு 2 | இசை ஆசிரியருக்கான தகுதிகள் |
| அலகு 3 | இசை பயிற்றுவித்தலின் முறைகள் |
| அலகு 4 | இசை மதிப்புக் கட்டுரை வரைதல் |
| அலகு 5 | இசைப் பயிற்சிக்கான இசைக் குறியீடுகளைக் கற்பித்தல் |
| அலகு 6 | பள்ளி வகுப்பு பல்வேறு நிலைகளுக்கான இசைப் பாடக் குறிப்பு தயாரித்தல், மாதிரி வினாத்தாள் தயாரித்தல் |

#### தாள்-2. கல்வி உளவியலும் பள்ளி ஆட்சிமுறையும்

#### கல்வி உளவியல்

**அலகு-1. கல்வி உளவியல்**

முன்னுரை - உளவியல் கல்வியும் - ஆசிரியர்க்கு உளவியல் அறிவால் ஏற்படும் நன்மைகள். மனித வளர்ச்சி - நடத்தைகளின் அடிப்படைக் காரணிகள் - (அ) மரபு நிலையும் - சூழ்நிலையும், (ஆ) கல்வியில் மனவெழுச்சியின் பங்கு. வளர்ச்சிப்பருவங்கள் - மனித வளர்ச்சியின் பொதுக்கோட்பாடுகள் - உடலியல் - உளவியல் குணநலன்கள் - பிள்ளைப் பருவத்திலும் இளமைப் பருவத்திலும் வளர்ச்சிக்குரிய செயல்கள். புலன்காட்சியும் உற்றுநோக்கலும்



-பொதுமைக் கருத்துச் சார்ந்த சிந்தனை - கற்பனை - ஆய்வுத்திறன்-ஆக்கத்திறன்

**அலகு-2. கற்றலின் இயல்பு**

திறம்படக் கற்றலுக்கு இன்றியமையாத காரணிகள் - கவனம் - ஊக்குவித்தல் - ஊக்குவித்தலில் இயல்பூக்கங்கள் - விளையாட்டு ஆர்வம் - செய்து கற்றல் - பயிற்சி மாற்றமும் தற்காலக் கல்வி முறையும். நினைவு -சிறந்த முறையில் மனத்திருத்தலுக்கான நிலைகள் - மறத்தல் - அதற்கான காரணங்கள் - அவற்றை நீக்கும் முறைகள். (அ) மாணாக்கரிடையே தனியாள் வேற்றுமைகள் - பொது நுண்ணறிவும் அளவீடும். (ஆ) மீத்திறக் குழந்தைகள் - பிற்பட்ட குழந்தைகள் (இ) பொருத்தப்பாடற்ற குழந்தைகள் - இயக்கக் குறைபாடுடையவர்.

**அலகு-3. ஒழுக்க வளர்ச்சியும் ஆளுமை வளர்ச்சியும்**

(அ) ஒழுக்க வளர்ச்சியில் பற்றுகளின் பங்கு. (ஆ) ஒருமைப்பாடுடைய ஆளுமையின் குணநலன்கள் (இ) சிக்கல் நடத்தையும் நெறி பிறழ்வும் - உளநலனியல் கோட்பாடுகள் ஆசிரியர் மாணாக்கருடைய உளநலம்.

2. குழு நடத்தை - பரிவு - கருத்தேற்றம் - பார்த்துச் செய்தல் - கல்வியும் சமூகமும் - வளரும் குழந்தையின் மீது சமூகத்தாக்கம் -வீடு-விளையாட்டுக்குழு - சமூகப் பிரிவு (வகுப்பு). சமயம், படக்காட்சி போன்றவற்றின் செல்வாக்கு -மக்களாட்சித் தலைமைக்கான பயிற்சி-மனவுணர்ச்சி வேறுபாடுகளையும் (இறுக்கம்) சமூகப் போராட்டங்களையும் நீக்கும் வழிமுறைகள் - மனவெழுச்சி ஒருமைப்பாட்டையும் அனைத்து நாடடுப் பொது நோக்கையும் வளர்த்தல்.

#### பள்ளி ஆட்சி முறை

**அலகு-4. ஆட்சிமுறை**

1. கல்வியின் நோக்கங்கள் - கல்வியில் அரசின் கொள்கை

2. பள்ளியிடம் - கட்டிடம் - வகுப்பறைப் பொருள்கள் -இருக்கை வசதிகள் - விளையாட்டிடம் - பள்ளிப் பொருட்காட்சி -பள்ளித் தோட்டம்

3. (அ) தொடக்கநிலை,இடைநிலை, உயர்நிலைப்பள்ளிகளுக்கான கலைத்திட்டம் (Curriculum) அமைத்தலின் கோட்பாடுகள் -

பள்ளிப்பாடத்திட்டம் பற்றிய அறிவு. (ஆ) பாட அலகினைத் திட்டமிடல் - ஒருநாள் பாடத்தைத் திட்டமிடல், (இ) பாட அட்டவணை அமைத்தலின் கோட்பாடுகள் - நன்மைகளும் குறைபாடுகளும், (ஈ) நூலகம் - வீட்டுவேலை- வெளிச்செலவு - பள்ளிப்பாடி வாழ்க்கை.

**அலகு-5. கடமைகள்**

1. (அ) தலைமை ஆசிரியர் - கடமைகள், (ஆ) ஆசிரியர் - தன் முன்னேற்றத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், பள்ளியில் வைக்கப் பெறும் பதிவேடுகள், (இ) ஆசிரியர் மன்றங்கள் - ஆசிரியர் குழுக் கூட்டங்கள், (ஈ) பெற்றோர் - ஆசிரியர் மன்றங்கள்

2. (அ) நாள்தோறம் நடைபெறும் காலைக்கூட்டம் - நோக்கம் - மாணாக்கர் தன்னாட்சிமுறை - மாணவர் விடுதி - தங்கிப் படிக்கும் விடுதி இணைந்த பள்ளிகள் - சாரணர் இயக்கம் - இளைஞர் குழுச் செயல்கள் போன்ற கலைத்திட்டத்தோடு இணைந்த செயல்கள் பெறும் சிறப்பிடம், (ஆ) பள்ளி ஒழுங்கு -அதன் இயல்பு - பரிசும் தண்டனையும் - பள்ளி ஒழுங்கினை நிலைநிறுத்தும் வழிகள்

3. தேர்வுகளும் மதிப்பீடும் - தேவை - தேர்வு வகை - தரப்படுத்தப் பெற்ற அடைவுச்சோதனைகள் - நல்ல சோதனையின் பண்புகள் - பிழைகள் ஆராய்தல் - பிழை நீக்கமுறைகள் - தேர்ச்சி மாணாக்கர் முன்னேற்றத்தினைக் குறித்து வைக்கும் பதிவேடுகள்.

4. தமிழ்நாடு கல்வி விதிகள் பற்றிய பொதுவான அறிவு - ஆசிரியர் தகுதி - விடுப்பு விதிகள் போன்றவை.

**பார்வைக்கான நூற்பட்டியல்**

**கல்வி உளவியல்**

1. Basic Psychology - J.S.Ross
2. Groundwork of Educatonal Psychology - J.S.Ross
3. Elements of Educatonal Psychology - H.P.Bhalja
4. Educatoinal Psychology - Jalota
5. கல்வி உளவியல் - கே.ஆர்.அப்பளாச்சாரியார்
6. கல்வி உளவியல் - எஸ்.சந்தானம்
7. கல்வி உளவியலும் கல்விச் சமூகவியலும் - எஸ்.சந்தானம்
8. கற்றலும் கற்பித்தலும் - கே.ஆர்.அப்பளாச்சாரியார் - [illegible]



9. குழந்தைகளின் இயல்பும் போதனாமுறையும் - ப.அருணசடை

**பள்ளி ஆட்சி முறை**

1. School Organisation - W.M.Ryburn
2. Secondary School Administration - S.K.Kochar
3. School Organisatoin - Paul Vargheese
4. The Organisation of Schools - W.M.Ryburn
5. பள்ளி நிருவாக அமைப்பு - எஸ்.சந்தானம் & ஏ.எஸ்.துரைசிங்
6. பள்ளி ஆட்சிமுறை - எஸ்.வடிவேலு

**இசை - செயல்முறை (Practical)**

| | |
|---|---|
| அலகு 1 | இராக அறிவுத் தேர்வு |
| அலகு 2 | தாள அறிவுத் தேர்வு |
| அலகு 3 | கேட்டதை எழுதுதல் |
| அலகு 4 | இசைக் குறியீடுகளைப் பார்த்துப் பாடும் திறன் அறிவு |
| அலகு 5 | இசை அமைத்துப் பாடும் திறன் |

**இசை பயிற்றுவித்தல் (Music Teaching)**

ஏதேனும் ஒரு பள்ளியில் 25 வகுப்புகள் எடுக்க வேண்டும்

**இசை உபகரணங்கள் (Musical Aids)**

| | |
|---|---|
| அலகு 1 | விளக்க அட்டவணை வரைபடம் (chart) |
| அலகு 2 | மின்னணு இசை உபகரணங்கள் (எலக்ட்ரானிக் சுருதிப்பெட்டி, தாள மீட்டர், கணிப்பொறி ஆகியவற்றை இசைப் பயிற்சிக்கு பயன்படுத்துதல்) |
| அலகு 3 | நிழற்படத் தொகுப்பு (Album) |
| அலகு 4 | ஒலிநாடாக்கள், குறுந்தகடுகள் |